# ஆய்த எழுத்து

தமிழியல் ஆய்வு இதழ்

காலாண்டிதழ்

ஜனவரி – 2016

AN INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES - ISSN: 2278-7550




visit us: www.pallavipathippakam.in

Scanned with CamScanner

# ஆய்த எழுத்து

## தமிழியல் ஆய்வு இதழ்

INTERNATIONAL JOURNAL FOR TAMIL STUDIES ISSN : 2278-7550

மலர் : 4 ஜனவரி - 2016 இதழ் : 1



**கௌரவ ஆசிரியர்**
முனைவர் சொ. சுப்பையா
அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி

**சிறப்பாசிரியர்**
முனைவர் அ. அறிவுநம்பி
புதுவைப் பல்கலைக்கழகம், புதுச்சேரி

**ஆசிரியர்**
முனைவர் சி. தியாகராசன்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம்.

**இணை ஆசிரியர்**
முனைவர் க. இரமேஷ்
திருவள்ளுவர் பல்கலைக்கழகம்,வேலூர்.

**துணை ஆசிரியர்**
முனைவர் போ. சத்தியமூர்த்தி
மதுரை காமராஜர் பல்கலைக்கழகம்,மதுரை.

**பதிப்பாசிரியர்**
நல். நடராசன்
தமிழியல் ஆய்வு மையம், ஈரோடு.








**0424**
**4562211,2263197**
**94422 51549**
**96291 82383**

**pallavipublications@gmail.com**
**ayidhaezhuthu@gmail.com**

**பல்லவி பதிப்பகம்**
194,கண்ணா காம்ளக்ஸ் , இரண்டாவது தளம்,
மேட்டூர் சாலை, ஈரோடு-638011.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1.சோழ நாட்டின் மருமகள் காவேரி | முனைவர்.க.ஆனந்தி | 5 |
| 2.இயேசு காவியத்தில் உவமைகள் | முனைவர்.தா.க.அனுராதா | 8 |
| 3.குழந்தைப் பாடல்களில் கல்வி | சு.அய்யனார் | 11 |
| 4.குறுந்தொகை வழிபாடு | அ.ஜெனார்த்தலிபேகம் | 14 |
| 5.அறமும் புறமும் காட்டும் கல்வி | சு.கௌரி | 17 |
| 6.தமிழ்மொழி வளர்ச்சியில் தெளிதமிழ் திங்களிதழ் | க.கண்ணன் | 22 |
| 7.வழிபாட்டில் பண்பாடு | பேரா.முனைவர்.மு.குருவம்மாள் | 25 |
| 8.கடல்சார் மக்கள் வாழ்வு ஆறுகாட்டுத்துறை புதினத்தை முன்வைத்து | முனைவர்.வீ.மீனாட்சி | 26 |
| 9.பக்தியில் ஆண்டாளும் மீராவும் | முனைவர்.க.மீரா | 29 |
| 10.தாலாட்டுப் பாடல்கள்-சிறப்பு | முனைவர்.க.முத்தழகி | 32 |
| 11.வணிக நாவல்களில் பாத்திரபடைப்பு | G.பிரதிபா | 35 |
| 12.பிரபஞ்ச வைராக்கியம் | முனைவர்.ப.பிரியா | 38 |
| 13.இரந்தார்க்கு இன்முகம் | முனைவர்.மு.புஷ்பாரெஜினா | 40 |
| 14.ராஜம் கிருஷ்ணன் புதினங்களில் பெண்ணியம் | து.புஷ்பவள்ளி | 43 |
| 15.சங்க அக இலக்கியங்களில் முல்லை வருணனை | ச.ராஜேஸ் | 46 |
| 16.பெருஞ்சொல்லகராதியின் அமைப்பும் சிறப்பும் | முனைவர்.சு.சத்தியா | 50 |
| 17.பண்டைய இலக்கியத்தில் விழாக்கள் | முனைவர்.பி.சேதுராமன் | 56 |
| 18.இரட்டைக் காப்பியங்களில் பெண்களின் சிறப்புக்களும் பாவேந்தரின் ஒத்தக்கருத்து | மா.விஜயலெட்சுமி | 60 |
| 19.இல்வாழ்வின் மேன்மை: திருக்குறளும் இன்னிலையும் | முனைவர்.மு.வையபுரி | 63 |
| 20.தொடக்க நிலையில் தமிழ்பாடம் கற்பித்தல் திறன் | முனைவர் மெ.வனிதா | 66 |
| 23.தமிழில் விளிம்புநிலைத் தன்வரலாறுகள் | எம்.எம்.ஜெயசீலன் | 78 |
| 21.சங்க இலக்கியத்தாவரங்களின் மருத்துவப் பயன்கள் (பிரண்டை, பீரம்) | பா.ஆரோக்கியதாஸ் | 71 |
| 22.குறுந்தொகையில் மலர்கள் | தா.பத்மா | 74 |
| 24.உலக அரங்கில் எதிர்ப்புக் கவிதை வரலாறு | திரு.செல்லத்துரைசுதர்சன், முனைவர்.போ.சத்தியமூர்த்தி | 84 |




Scanned with CamScanner

# சோழ நாட்டின் மருமகள் காவேரி

முனைவர் க.ஆனந்தி

உதவிப் பேராசிரியர்

பான் செக்கர்ஸ் மகளிர் கல்லூரி

தஞ்சாவூர்.

சேரநாட்டு மேற்கு மலைத் தொடரில் தோன்றி, இழிந்தோடும் பலவற்றில் சான்றோர்களால் மிகவும் புகழப்பட்ட பேராறுகளுள் காவிரியும், வைகையும் தண்ணான் பொருநையும், பேரியாறும் சிறப்புடையனவாம். இவற்றுள் காவிரியாறு சேரரது குடநாட்டில் தோன்றித் தன்னைப் போல் தோன்றிவரும் ஏனைச் சிற்றாறுகளோடு கூடிக் கொங்கு நாடு கடந்து சோழ நாட்டிற்கு வருகிறது. வங்காளக் கடலில் கலப்பதற்காக காவிரி புகும் இடத்தை புகார் என்றும், காவிரிப் பூம்பட்டினம் என்றும் அழைத்தனர். தமிழகத்தில் காவிரி ஆறு மூன்று மாவட்டங்கள் வழியாக ஓடுகிறது. சேலம், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் ஆகியனவாகும். பழங்காலத்தில் இந்த மூன்று மாவட்டங்களைத் தான் ''சோழ நாடு'' என்று அழைத்தனர். சோழநாட்டின் வேறு பெயர் 'காவிரி நாடு' என்றும் கூறியுள்ளனர்.

தஞ்சாவூர் மாவட்டம் தமிழ்நாட்டின் நெற்களஞ்சியம் என்பது நாம் அறிந்த ஒன்று. அத்தகைய நெல்வளத்துக்கு முக்கியக் காரணம் காவிரி ஆறு. ''சோழநாடு சோறுடைத்து'' என்னும் பெருமையும் காவிரி ஆற்றினையே சாரும்.

## ஆற்றுத் தீவு

காவிரி ஆற்றுக்கு நடுவில் மூன்று தீவுகள் இருக்கின்றன. அதில் முக்கியத் தீவு திருவரங்கம் ஆகும். அரங்கம் என்றால் ஆற்றுத்தீவு என்று பொருள். திருவரங்கத் தீவு திருச்சிராப்பள்ளிக்கு அருகில் அமைந்திருக்கிறது. இந்த தீவில் இரு கோவில்கள் காணப்படுகின்றன. 1.ஸ்ரீரங்கம் 2.திருவானைக்கா.

## பொன் கொழிக்கும் காவிரி

''வசை இல் புகழ் வயங்கு வெண்மீன்
திசை திரிந்து தெற்கு ஏகினும்
தற் பாடிய தளி உணவின்
புள் தேம்பப் புயல் மாறி
வான் பொய்ப்பினும் தான் பொய்யா
மலைத் தலைய கடற் காவிரி

புனல் பரந்து பொன் கொழிக்கும்''

வெள்ளிக் கோள் தான் நிற்பதற்துரிய வடக்குத்திக்கில் நில்லாமல் தெற்குத்திக்கில் சென்றாலும்,தன்னைப்பாடும் வானம்பாடிப் பறவை மழைநீர்த்துளியைப் பெறாமல் வருந்தும் வண்ணம் மழை பெய்யாமல் மேகம் பொய்த்து விட்டாலும், தான் நீர் பரவி உலகத்தைப் பாதுகாத்தலைத் தவிராது காவிரியாறு. அது குடகுமலையில் தோன்றுவது. கடலில் புகுவது. அது செல்லுமிடம் எல்லாம் கரையில்



Scanned with CamScanner

பொன்னை ஒதுக்கும். இத்தகைய பொன் கொழிக்கும் தன்மையது சோழநாடு.

வெள்ளிக் கோளானது வடக்கில் அன்றித் தெற்கில் தோன்றின் பஞ்சம் ஏற்படும் என்பது தமிழ் நூலின் கொள்கை. அத்தகைய தன்மை ஏற்பட்டாலும் காவிரி நீர் பஞ்சத்தை தடுத்தது என்று பலராலும் கூறப்பட்ட உண்மை.

“இலங்கு கதிர் வெள்ளி தென்புலம் படரினும்அந்தண் காவிரி வந்து கவர்பு ஊட்ட”

(புறம் 35:7-8)

“கரியவன் புகையினும் புகைக்கொடி தோன்றினும்

விரிகதிர் வெள்ளி தென்புலம் படரினும்

.............. .............. ................. .................

காவிரிப் புதுநீர் கடுவரல் வாய்த்தலை”

(சிலம்பு 10:102-103)

“கோணிலை திரிந்து கோடை நீடினும்

தூனிலை திரியாத் தண்டமிழ்ப் பாவை”

(மணி பதிகம் 24,25)

“மன்னர் நடுங்கத் தோன்றிப் பல் மாண்

எல்லை தருநன் பல் கதிர் பரப்பிக்

குல்லை கரியவும் கோடு எரி நைப்பவும்

அருவி மா மலை நிழத்தவும் மற்று அக்

கருவி வானம் கடற்கோள் மறப்பவும்

பெரு வறன் ஆகிய பண்பு இல் காலையும்

நரையும் நரந்தமும் அகிலும் ஆரமும்

துறைதுறை தோறும் பொறை உயிர்த்து ஒழுகி”

(பொருநர் 232-239)

பகை மன்னர் நடுங்கும்படி விளங்கி ஞாயிறு கதிர்களைப் பரப்புதலால் கஞ்சங்குல்லை தீயவும் மரக்கொம்புகளைத் தீ தின்னவும், மலைகளில் அருவிகள் வற்றி இல்லையாகவும் மேகங்கள் கடல் நீரை முகத்தலை மறக்கவும் பெரிய வற்கடம் உண்டான காலத்தும், காவிரி நறைக்கொடியும், நரந்தம் புல்லும், அகிலும், சந்தனமும் ஆகியவற்றைச் சுமந்து கொணர்ந்து அவற்றை நீர்த்துறைகளில் ஒதுக்கி மெல்ல இளைப்பாறி இயங்கும்.

**விளைவறா கழனி**

“விளைவு அறா வியன் கழனி

கார்க் கரும்பின் கமழ் ஆலைத்

தீத் தெருவின் கவின் வாடி

.......... .......... ........... ..........

காய் கமுகின் கமழ் மஞ்சள்

இன மாவின் இணர்ப் பெண்ணை

முதற் சேம்பின் முளை இஞ்சி”

(பட்டின :8-19)

விளைவு குறையாத அகன்ற வயல்களில் பசிய கரும்பின் மணம் கமழும் பாகைக் காய்ச்சும் கொட்டிலில் எழும்புகை சுடுதலால் அழகு கெட்டு வாடும் ஆம்பலையுடைய நீர் நிறைந்த வயலையுடையவும் அந்நிலங்களில் விளைந்த நெல்லின் கதிரைத் தின்ற வயிற்றையுடைய எருமைக் கன்றுகள் நெற்கூடுகளின் நிழலில் உறங்கப் பெற்றனவும், குலைகளையுடைய தென்னை, வாழை, கமுகு, மஞ்சள், மாமரம், பனை, சோம்பு, இஞ்சி முதலியவற்றையுடையதும் ஆகிய சோழநாடு காவிரி ஆறு பொய்க்காது பெருகுதலால் கழனிகள் விளைவு குறைவு படாமல் விளங்கின. கோடை காலத்திலும் விளைதலால் “விளைவறா கழனி” என்றனர்.

“நுரைத் தலைக் குரைப் புனல் வரைப்பு அகம் புகுதொறும்

புனல் ஆடு மகளிர் கதுமெனக் குடையக்

........ ............... .................. ..........................

சாலி நெல்லின் சிறை கொள் வேலி

ஆயிரம் விளையுட்டு ஆக

காவிரி புரக்கும் நாடு கிழவோனே”

(பொருந 240-248)

நுரையை உடையதும் ஆரவாரம் உடையதும் ஆன நீர் குளத்திலும், கோட்டகத்திலும் புகுந்தோறும் நீராடும் மகளிர் குடைந்து விளையாட உழவர் மிகவும் வளைந்து நின்று அரிவாள் வாயால் நெற்கதிர்களை அறுத்து மலையாய் அடுக்கி மேரு மலை என்னுமாறு குவித்த தொலையாத நெற்பொலி நன்கு தைத்த மூட்டைகளில் குதிர் முதலியவற்றின் இல்லாமையால் எங்கும் கிடக்கின்ற செந்நெல் விளைகின்ற வரம்பு கட்டப்பட்ட ஒருவேலி நிலம் ஆயிரம் கலநெல் விளையும்படி காவிரியாற்றால் வளப்படுத்தும்படி நாடு முழுவதும் தனக்கே உரியதாம் இயல்பை உடையவன் கரிகாலன் ஆவான்.

**காவிரியின் நீரில் திருமஞ்சனம்**

உலகில் மழை வளம் நிலை பெற்று இருக்கவும், மக்களுக்கு வாழ்வாதாரமாக விளங்கும் நீரினை அருளாய் வழங்கக் கூடியவனுமான இந்திரனை சிறப்பிக்கும் விதமாகவும், புகார் நகரில் “இந்திர விழா” கொண்டாடப் பட்டுள்ளது.



Scanned with CamScanner

அவ்விழாவில் இந்திரனை நீராட்டல் என்பது சிறப்பு பொருந்தியது.

"மாஇரு ஞாலத்து மன்னுயிர் காக்கும்

ஆயிரத்து ஓர்எட்டு அரசுதலைக் கொண்ட

தண்நறுங் காவிரி தாதுமலி பெருந்துறைப்

புண்ணிய நல்நீர் பொற்குடத்து ஏந்தி

மண்ணகம் மருள வானகம் வியப்ப

விண்ணவர் தலைவனை விழுநீர் ஆட்டி"

(சிலம்பு, இந்திர:163-168)

இளங்கோவடிகள் காவிரியின் சிறப்பை எடுத்துக் கூறுகிறார். மிகவும் பெரிதான உலகத்தில் நிறைந்திருக்கின்ற உயிரினம் அனைத்தையும் தாங்கிக் காக்கும் ஆயிரத்து எட்டுத் தலைகளையுடைய ஆதிசேடனைப் போலத் தன் வளத்தால் உலகை ஊட்டித் தாங்கிக் காக்கும் குளிர்ந்த நறிய காவிரியின் பூந்தாது மலிந்து கிடக்கும் பெரிய சங்கமத் துறையிலே புண்ணிய நன்னீரினைப் பொற்குடங்களிலே முகந்து ஏந்தி, மண்ணகம் கண்டும் கேட்டும் மருட்சியுறவும், வானகம் கண்டு வியப்புறவுமாக அவ்விண்ணவர் தலைவனின் திருவுருக்குத் திருமஞ்சன நீரும் ஆட்டினர்.

இங்ஙனம் காவிரி புண்ணிய நீராகக் கூறப்பட்டுள்ளதை நாம் அறிய முடிகிறது.

**புதுப்புனல் விழா**

உழவர்களுக்கு நீர் மிகவும் அவசியமான ஒன்று. தங்களது நிலங்களை விளைவிக்கும் பொருட்டு காவிரி நீரினை எதிர்பார்த்துக் காத்திருக்கும் இன்றைய சூழலில் வற்றாத ஜீவ நதியாய் பாய்ந்து வளம் கொழித்தது காவிரி என்று பாடியுள்ளார் இளங்கோவடிகள். அத்தகைய காவிரியில் புதிதாய் நீர் திறக்கையில் விழா எடுத்துக் கொண்டாடியுள்ளனர் சோழ நாட்டு மக்கள்.

"உழவர் ஓதை மதகு ஓதை
உடைநீர் ஓதை தண்பதங் கொள்
விழவர் ஓதை சிறந்து ஆர்ப்ப
நடந்தாய் வாழி, காவிரி!
விழவர் ஓதை சிறந்து ஆர்ப்ப
நடந்த எல்லாம் வாய்காவா
மழவர் ஓதை வளவன் தன்
வளனே வாழி காவேரி! (கானல்வரி 2:4)

உழவரின் ஏர் மங்கல ஓசையும், மதகிலே நீர் வடிகின்ற ஓசையும், வரப்புக்களை உடைத்துப் பாய்கின்ற நீரின் ஓசையும் புதுப்புனல் விழாக்கொண்டாடும் மக்களின் மகிழ்ச்சி ஆராவாரமும் மிகுதியாக இருமருங்கும் ஆர்ப்பரிக்க, நீ நடந்து வருபவள். விழா கொண்டாடுவோரின் ஆரவாரம் சிறந்து ஒலிக்க நீ நடந்தாயே, அஃதெல்லாம், அரணிடத்தைக் காவல் செய்வதும், வேண்டாமைக்கு ஏதுவாகிய வீரமறவர்களின் போர் முழக்கத்தினை உடையதுமான சோழனது ஆட்சிவளவனின் பயனேயாகும் என்பதனை நீயும் அறிவாயாக. காவேரியே, நீ வாழ்வாயாக! என்று வாழ்த்தி விழா கொண்டாடியுள்ளனர்.

**கடலில் ஆடலும் காவிரியில் ஆடலும்**

புகார் நகரில் உள்ள பரதவர்களின் பொழுதுபோக்காக இந்நிகழ்வு கூறப்பட்டுள்ளது. புலால் நாற்றம் வீசும் மணல்பரப்புடைய, மலர்கள் நிறைந்து காணப்படும் கடற்கரைக்குப் பக்கத்தில் தெளிந்த நீரையுடைய காவிரி நீர் கலக்கும் புகார் நகரத்தில், ஒலியையுடைய கடலில் தீவினை போக ஆடினர். அதோடு மட்டுமல்லாது அங்கு திரியும் நண்டுகளைப் பிடித்து ஆட்டினர், அலையில் விளையாடினர். பாவைகளைச் செய்தனர், ஐம்பொறிகளாலும் அமைதற்குரிய பொருள்களை நுகர்ந்தனர். நீங்காத விருப்புடனே பகற்போதில் விளையாடினர். அங்ஙனம் விளையாடுதற்கு இடம் ஆதலால் தலைமையுடைய சுவர்க்கத்தையே ஒத்ததாய் விளங்கியது. இத்தகைய பொய்த்தல் இல்லாத முறைமையுடைய மலர்கள் மலிந்த காவிரி ஆற்றுத் துறையையும் உடையது தான் புகார் பட்டினம் என்கிறார் கடியலூர் உருத்திரங்கண்ணனார்.

"புலவு மணல் பூங் கானல்
மா மலை அணைந்த கொண்மூப் போலவும்
.............. .......... ................ .......................
தீது நீங்க கடல் ஆடியும்
மாசு போக புனல் படிந்தும்
அலவன் ஆட்டியும் உரவுத் திரை உழக்கியும்
பாவை சூழ்ந்தும் பல் பொறி மருண்டும்
அகலாக் காதலொடு பகல் விளையாடி
பெறற்கு அருந் தொல் சீர்த் துறக்கம் ஏய்க்கும்
பொய்யா மரபின் பூ மலி பெருந் துறை"
(பட்டின 94-105)

பொதுவாக, பெண்கள் பிறந்த இடத்தைக் காட்டிலும் புகுந்த இடத்தில் பெருமை தேடித்தருவது தான் சிறப்பு. அதிக உரிமையும் அவர்களுக்கு புகுந்தகத்தில் தான் வாய்க்கப் பெறுகிறது. அதுபோல, காவிரி என்னும் நங்கையின் பிறப்பிடம் வேறாக இருந்தாலும், அவள் தமிழகத்தின் மருமகளாய் காலடி வைத்துள்ளாள். புகுந்தகத்தில் அவள் பெருமையை பாடாதவர் இல்லை. சில காலம் தாய் வீட்டில் இருந்தால் அங்கேயே வைத்துக் கொள்ள எண்ணுவது நியாயம் அன்று. ஏனெனில் காவிரி சோழ நாட்டிற்கு உரியவள்.



Scanned with CamScanner

ISSN : 2278-7550

பல்லவி பதிப்பகம்

2278- 7550

Scanned with CamScanner